ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த

# ॥ சரமச்லோகச்சுருக்கு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ சரமச்லோகச்சுருக்கு ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡கல்லார் அகலும்⋆ கருமமும் ஞானமும் காதலும்⋆ மற்றெ-
ல்லா நிலைகளுக்கேற்ப⋆ விதித்த கிரிசைகளும்⋆
வல்லார் முயல்க⋆ வலி இழந்தார் என் தனைத் தொழுகென்று⋆
எல்லாத் தருமம் உரைத்தவன்⋆ இன்னடி சேர்ந்தனமே (1)

வெறுமை உணர்ந்தது முன்னிட்டு⋆ வேறங்கம் இல்லை எனக்⋆
குறியவன் இன்னறவெட்டக்⋆ குறித்திடும் கோணை துறந்து⋆
உறும் அயன் அத்திரம் என்னப்⋆ பொறா நிலை ஓர்ந்திட ஓர்⋆
அற நெறி அன்றுரைத்தான்⋆ அழியா அறமாயினனே (2)

வாரிதி விட்டு⋆ மலர்மகளோடு மதுரை வந்து⋆
பாரத வெஞ்சமர்⋆ பார்மகள் பாரம் செக உகந்து⋆
சாரதியாய் முன்பு தூதனுமாய்த்⋆ தளரும் விசயன்
தேரதில் நின்று⋆ அவனைத் தேற்றினான் திறம் ஆயினமே (3)

தன் அருளால் பெறும் சாதனம்⋆ சாதகன் என்றிவற்றைத்⋆
தன்னுடன் எண்ணுதல் நீங்கத்⋆ தனித்தொரு சாதனமாய்ப்⋆
பொன் அருளோடும் அப்பூமகளோடும்⋆ புகழ நின்ற⋆
இன்னுரை ஈசனையே⋆ ஏகம் எண்ண இசைந்தனமே (4)

ஊனில் இணைத்துழல்விக்கும்⋆ வினைக் கடலுள் விழுந்த⋆
யான் எனதான குணங்கள்⋆ எனக்கிசை நல் வழியும்⋆
தான் உதவித் தனைத் தந்திட நின்ற⋆ தனித் தருமம்⋆
நான் இனி வேறொர் பரம்⋆ நணுகாவகை நல்கியதே (5)

www.prapatti.com

கடு வினை நாம் பெறும் பேற்றைத்⋆ தகைந்தமை கண்டு நம்மேல்⋆
தொடை விலகாமல் இசைந்து⋆ ஒரு காலம் துணிவுடனே⋆
உடைமை அடைக்கலமாக⋆ அடைக்கும் உகப்பதனால்⋆
அடை என அன்றுரைத்தான்⋆ அடைவித்தனன் தன் அடியே (6)

கான் என்ற வேதங்கள்⋆ காக்கும் பரன் என்று காட்ட நின்றோன்⋆
தான் என்றறியகிலார்க்கு⋆ அறிவிக்கும் தனித் திறலோன்⋆
வான் ஒன்றினாரொடு⋆ மானிடன் என்ன அவதரிப்பான்⋆
நான் என்ற நம் திருமால்⋆ நமை நற்பதம் சேர்த்திடுமே (7)

தன்னிலை காட்டித்⋆ தனிமை உகந்து தனித் தகவால்⋆
அன்னிலை தீர அடைக்கலம் கொண்டு⋆ அடி சேர்த்திடவே⋆
பன்னிலை மூல எழுத்திலும்⋆ பாண்டவன் தேர் தனிலும்⋆
முன்னிலை கொண்ட பிரான்⋆ எமை முன்னிலை
கொண்டனனே (8)

காடுகளோ நரகோ⋆ கடிதாம் கரளத் திரளோ⋆
சூடு விடா அனலோ⋆ தொலையா நிலை நள் இருளோ⋆
சாடு படச் சரணால்⋆ அன்று சாடிய சாரதியார்⋆
வீடு செய்வித்து நமை⋆ விடுவிக்கின்ற பாவங்களே (9)

‡சென்றுயர் வான் அமர்ந்து⋆ அவ்வடியாருடன் சேர்ந்திடவே⋆
இன்றெனில் இன்று நாளை⋆ எனில் நாளை இனிச் செறிந்து⋆
நின்ற நிலை நின் அனைத்து வினையும்⋆ நின் விட்டகலக்⋆
கன்றி விடுப்பன் என்றான்⋆ கருத்தால் நமைக் காத்திடுமே (10)

‡அறிவும் அனைத்தும் இலா அடியோமை⋆ அடைக்கலம் கொண்டு⋆
உறவென நின்ற எலாம்⋆ உறவே நின்ற தான் எமக்காய்⋆
மறு பிறவித் துயர் வாராவகை⋆ மனம் கொண்டகலா⋆
இறையவன் இன்னருளால்⋆ எங்கள் சோகம் தவிர்த்தனனே (11)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com